DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 16/2021**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சேவியர் | Caste: | |
| Father's Name: | தேவதாஸ் | Calling: | கொத்தனார் |
| Village: | ராஜீவ் நகர் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 40/2026 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 30.06.2026

( 2, 3, 5 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. ஏனைய எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா, பரமக்குடி ராஜீவ் நகரில் வசித்து வருகிறேன். அ.சா.1 ரேணுகா எனது தம்பி மனைவி. இவ்வழக்கில் இறந்துபோன ஜெயசந்திரன் எனது உடன்பிறந்த தம்பி. பட்டியல் சாட்சி 2 தருமன் மகன் ராகவன் என்பவரை தெரியும். பட்டியல் சாட்சி 5 இராமமூர்த்தி எனது மாமனார். நாங்கள் அனைவரும் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள். 1 முதல் 4 எதிரிகளை எனக்கு தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. ஆனால் அவர்கள் மேற்கண்ட எதிரிகளின் நண்பர்கள். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு பங்குனி மாதம் ஆங்கிலம் 25ம் தேதி நான் பரமக்குடியில் வேலை பார்த்து கொண்டிருந்தேன். அப்போது எனது கொழுந்தியா எனக்கு தொலைபேசி மூலமாக அழைத்து உங்கள் தம்பி என்னிடம் சண்டை போடுகிறார், எனது அப்பா வந்திருக்கிறார், நீங்கள் வந்தீர்கள் என்றால் சமாதானம் பேசலாம்

SELVARAJAN SIVAKADATCHAM
Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.06.30 15:53:39 +0530

என்று என்னை அழைத்தார். நான் வீட்டிற்கு சென்றேன். அங்கு எனது தம்பியை சண்டை போடக்கூடாது, நன்றாக இருக்கவேண்டும் என்று அறிவுரை கூறி அவரை வெளியில் சென்று வா என்று அனுப்பி வைத்தேன். மறுநாள் 26ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது மீண்டும் எனது கொழுந்தியா தொலைபேசி மூலமாக அழைத்து பொன்னையாபுரம், பாலன் நகர் அருகே ரீச் கால்வாய் பக்கமாக என் தம்பி இறந்து கிடப்பதாகவும், வாருங்கள் என்று அழைத்தார், நான் உடனே அங்கு சென்றேன். நான் அங்கு சென்றபோது மதியம் 2 மணி இருக்கும். அங்கு ரேணுகா, ரேணுகாவின் அப்பா, ராகவன், செல்வம் கொத்தனார், ஜெயசந்திரன் மாமியார், ராகவனின் மகன் ஆகியோர் இருந்தார்கள். நெஞ்சுப்பகுதியில் காயத்தோடும், ஆண் உறுப்பு பகுதி வீங்கியும் என் தம்பி இறந்து கிடந்தார். பின்பு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு இறந்த உடலை கொண்டு சென்றோம். பின்பு பிண கூறாய்வு முடித்து நல்லடக்கத்திற்காக மதுரை கொண்டு சென்று நல்லடக்கம் செய்தோம். இது சம்மந்தமாக எனது கொழுந்தியா ரேணுகா பரமக்குடி நகர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>5வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

குறுக்கு விசாரணை இல்லை. (5வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2026.06.30 15:53:44 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.